தேவ தூதரின் கடைசி எக்காள தொனி முழங்க,
ஜெகத்தில் ஏசுவைப் பற்றி மரித்தோர் உயிர்தெழும்ப,
ஜீவனுள்ளோரும் அவருடன் மறுரூபமாக,
ஜெகத்தில் பக்தர்கள் கர்த்தரிடத்துக் கெழுந்துபோக,
எனது கர்த்தரின் ராஜரீக நாள் எப்போ வருகுமோ?
ஏங்கும் என்கலி நீங்க மகிழ்ச்சி எப்போ பெருகுமோ.

In Traditional Bishop's Robe

நெல்லை அத்தியக்ஷரவர்களின் கடிதங்கள்

நற்போதகம் - ஆகஸ்ட் 1953

கிறிஸ்துவுக்குள் அன்பார்ந்த சகோதரரே,

நல்ல மேய்ப்பனாக இயேசு கிறிஸ்துவின் பணிவிடைக்காரனாக அழைக்கப்பட்டிருக்கிற நான், கிறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லி எழுதுகிறதாவது :-

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

ஜூலை மாதம் 2-ம் நாள் மாலையில் அத்தியக்ஷ ஆசனத்தில் அமர்த்தப்படும் ஆராதனையில் கூறப்பட்டபடி அத்தியக்ஷரின்

ஊழியம் உன்னதமானது;
ஆனால்,
ஊழியன் உதவாதவன்;
என்றாலும்,
உபயோகிப்பவர் இயேசு;
ஆகையால்,
உங்கள் ஜெபம் அவசியம்.

இக்கடிதத்தின் மூலமாக நான் உங்களைக் கேட்டுக்கொள்ளும் விண்ணப்பம்யாதெனில், "**சகோதரரே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.**" அத்தியக்ஷருக்காக நீங்கள் தினந்தோறும் ஜெபிப்பதற்கு அனுகூலமாக, இம்மாத நற்போதக பத்திரிகையினுள், சிறு ஜெபமடங்கிய ஓர் துண்டுத்தாள் வைக்கப்பட்டிருகிறது. அதை ஆலயத்தினுள்ளிருக்கும் ஜெப புஸ்தகத்துக்குள் ஒட்டிவைத்துக்கொண்டு, ஆராதனைகளில் உபயோகிக்குமாறு அன்பாய்க் கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறே உங்கள் குடும்ப ஜெபங்களிலும், தனி ஜெபங்களிலும் அத்தியக்ஷருக்காக ஜெபிப்பது, நீங்கள் உங்கள் அத்தியக்ஷருக்குச் செய்யும் ஓர் பேருதவியாகும்.

நெல்லை ஜில்லாவிலேயே பிறந்து வளர்ந்து, நெல்லை சபைகளிலேயே குருத்துவ ஊழியம் செய்து, தற்சமயம் அத்தியக்ஷ பணிவிடை செய்பவரை எப்படி அழைப்பது என்ற பிரச்சனை சிலர் மனதில் எழும்பலாம். ஜூலை மாசம் 3ம் தேதி பாளைங்கோட்டை நூற்றாண்டு மண்டபத்தில் நடைபெற்ற வரவேற்பு கூட்டத்தில் அறிவிக்கப்பட்டபடி, அத்தியக்ஷ ஊழியம் அதிகாரமும் அந்தஸ்துமுடைய பதவியல்ல; அது, அடியாரின் அடிகளைக் கழுவிய ஆண்டவரின் முன் மாதிரியைப்

பின்பற்றும் ஊழியம்; வேத வசனத்தைப் போதிக்கும் ஊழியம்; பிறருக்காகப் பிரார்த்திக்கும் ஊழியம். விசுவாசத்தை பலப்படுத்தும் ஊழியம். இயேசு ஊழியம் கொள்ளும்படி வராமல் உழியம் செய்யவே வந்தார். அவரைப் பின்பற்றும் அத்தியக்ஷரும் ஊழியம் செய்பவரே. ஊழியக்காரனை 'Lord' என்றாவது 'Lordship' என்றாவது அழைப்பது சற்றென்கிலும் பொருந்தாது. இப்பதங்கள் இப்பிரபஞ்ச அதிகார வர்க்கத்தினருக்கு உரியனவேயன்றி ஆவிக்குரிய பணிவிடையை செய்பவருக்குப் பொருந்தாதவை. ஆகையால் அதிகாரத்தைக் குறிக்கும் எவ்வித பதத்தையும் உபயோகியாமல் அன்பிற்குரிய பதங்களை மாத்திரம் உபயோகித்து அத்தியக்ஷரை அழைக்கும்படியாக உங்களை அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றுமோர் விண்ணப்பம் :- உங்கள் சபைகளுக்கு அத்தியக்ஷ பணிவிடை செய்ய நான் வரும்பொழுது கொட்டு மேளங்களாவது, பவனியாவது, பூமாலைகளாவது வரவேற்பு ஆர்ப்பாட்டங்களாவது, வைக்காதபடி பார்த்துக்கொள்ளும்படியாக தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். இவை இவ்வுலக அதிகாரிகளுக்குரியவை; ஆத்மீக ஊழியனுக்கு இவை அனாவசியம். ஒரு வேளையில், ஆராதனை முடிந்தபின், சபையாக அத்தியக்ஷரை சந்திக்க நேரிடின், வெறுங்கையோடு அத்தியக்ஷரை சந்திப்பது எங்கள் வழக்கமல்ல என்று எவரேனும் கூறிடின், அவரது மனதை சாந்தி செய்யத்தக்கதாக சபைப் பிரதிநிதிகளில் ஒருவர், சபையின் சார்பாக, ஒரு எலுமிச்சம்பழத்தை மாத்திரம் அத்தியக்ஷர் கையில் கொடுத்து, சபையின் வரலாற்றை அத்தியக்ஷரிடம் தெரிவிக்கலாம்; அத்தியக்ஷர் கடவுளின் நாமத்தினால் சபையை ஆசீர்வதிப்பார். அச்சமயத்திலும், சகோதரரே, பூமாலை வேண்டாம்.

உலக வழிபாடுகளிலும் நமது முயற்சியையும் சிந்தனையையும் செலுத்தாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்த நமது ஆண்டவரின் சிந்தையை அணிந்து கொண்டவர்களாய், அவரது நாமத்தை மகிமைப்படுத்தவும், அவரது ராஜ்யத்தை விருத்தியடைச் செய்யவுமே கண்ணுங் கருத்துமாயிருப்போமாக.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்களனைவரோடுங்கூட இருப்பதாக.

இப்படிக்கு,
உங்களன்புள்ள ஊழியன்,
அ.ஞா. ஜெபராஜ், அத்தியக்ஷர்.

நற்போதகம் - செப்டம்பர் 1953

கர்த்தருக்குள் **பிரியமான சகோதரரே,**

ஆதிச் திருச்சபையில் கிறிஸ்தவர்களின் தொகை பெருகின போது பந்தி விசாரிக்கும் தொழிலில் அப்போஸ்தவர் ஈடுபட நேரிட்டது. அவ்வேலை அவசியமான வேலையாக இருந்த போதிலும், தங்கள் பிரதானமான வேலைக்கு அது இடையூறாயிருக்கிறது என்று அப்போஸ்தவர் சொன்னது யாதெனில் "நாங்கள் தேவ வசனத்தைப் போதியாமல் பந்தி விசாரணை செய்வது தகுதியல்ல; ஆதலால், சகோதரரே, பரிசுத்தாவியும் ஞானமும் நிறைந்து நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழு பேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள். அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம். **நாங்களோ ஜெபம் பண்ணுவதிலும் தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம்**" என்றார்கள். (அப். 6 : 3, 4) சபையாருக்கு அது நலமானதாகத் தோன்றிற்று. உடனே ஏழு பேர் தெரிந்தெடுக்கப்பட்டு உதவிக்காரராக நியமிக்கப்பட்டார்கள். பந்தி விசாரிக்கும் வேலை அவர்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டது. அப்போஸ்தலர் தங்கள் நேரத்தை ஜெபம் செய்வதிலும் "தேவ வசனத்தைப் போதிப்பதிலும் செலவிட்டார்கள். அதனால் ஏற்பட்ட பலாபலன் என்ன? தேவ வசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று. ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படிந்தார்கள்" (அப் 6 : 7)

நெல்லை அத்தியக்ஷாதீனத்தில் கிறிஸ்தவர்கள் தொகை பெருக வேண்டுமாயின் அத்தியக்ஷரும் குருக்களும், அப்போஸ்தவர் சொன்னது போல "நாங்களோ, ஜெபம் பண்ணுவதிலும் தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் **இடைவிடாமல் தரித்திருப்போம்**" என்று கூறவேண்டும்; கூறுவது மாத்திரமல்ல சாதனையிலும் நிறைவேற்ற வேண்டும். **இடை விடாமல்** என்ற பதம் கவனித்தக்கது, நாம் எல்லாரும் ஜெபம் பண்ணுகிறோம்; பலர் வேதம் வாசிக்கிறோம்; சிலர் தேவ வசனத்தைப் போதிக்கிறோம். ஆனால் **இடைவிடாமல் ஜெபம்** பண்ணுவதில் தேவ வசனத்தைப் போதிப்பதிலும் தரித்திருப்பவர்களோ வெகு சிலர். அதனால் தான் கிறிஸ்து சபை வளரவேண்டிய பிரகாரமாக வளரவில்லை; பல சபைகள் உயிரற்றுக் கிடக்கின்றன. சபைகள் உயிர்ப்பிக்கப்படவேண்டும். புற மதஸ்தர் மனந்திரும்பி திருச்சபையில் வந்து சேரவேண்டும். சீஷர்கள் தொகை பெருகவேண்டும். **தேவையானது:- ஜெபம், தேவ வசனப் போதனை. இவ்விரண்டையுமே எனது** முக்கிய **வேலையாக நான் கருதுகிறேன்;** குருமாரும் தங்கள் முக்கிய வேலையாகக் கருதவேண்டும்.

ஜெபம் செய்வதற்கு அனுகூலமாக (1) ஒரு நோட்டு புஸ்தகம் என் மேசையின் மேல் இருக்கிறது. அதில் நம் அத்தியக்ஷாதீனத்திலுள்ள எல்லா குருமாருடைய பெயர்களும் அடங்கிய ஜாபிதா உண்டு. விசேஷித்த ஜெபம் செய்யக் கேட்டோருடைய பெயர்களும் அதிலே எழுதப்படுகின்றன. அதிலே குறிப்பிடப்பட்டிருப்பவர்களுக்காக அடிக்கடி ஜெபம் செய்து வருகிறேன்.

(2) வெள்ளிக்கிழமைகள் தோறும் எனது தனி ஜெபநாளாகப் பாவித்து, எனது பங்காளவை விட்டுவிட்டு தனிமையான ஓரிடத்திற்குச் சென்று, அந்த நாள் முழுவதையும் ஜெபத்திலும் வேத தியானத்திலும் கழிக்க முயன்று வருகிறேன். ஆகையினால் வெள்ளிக்கிழமைகளில் என்னைப் பார்க்கவாவது, அல்லது ஏதாவது அலுவலுக்கு என்னை அழைக்கவாவது வேண்டாமென்று உங்களெல்லாரையும் அன்பாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

(3) சபையாரின் ஜாபிதாக்கள் என் வசமிருந்தால் சபையாருக்காகவும் நான் வேளா வேளைகளில் ஜெபிக்கக்கூடும் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன். பேதுருவைப் பார்த்து "உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்" என்றார் இயேசு. உங்கள் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உங்களுக்காக ஜெபம் பண்ண வேண்டியது உங்கள் அத்தியக்ஷருடைய கடமை.

அமலேக்கியருடன் யுத்தம் செய்த யோசுவாவுக்கும், இஸ்ரவேலருக்காகவும், மலையின் மேல் நின்று மோசே ஜெபித்தது போல அத்தியக்ஷரும் குருக்களும் உலகத்திலே சாத்தானோடு எதிர்த்துப் போர் செய்யும் சபையாருக்காக பூட்டப்பட்ட அறைகளுக்குள்ளிருந்தும், மலைப்பிரதேசங்களிலிருந்தும், காடான வெளிகளிலிருந்தும் ஜெபிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். மோசேயின் கைகள் தளர்ந்த போது, ஆரோனும், ஊரும், மோசேயின் கைகளை உயர்த்திப் பிடித்துக்கொண்டு ஜெபத்தில் அவனுக்கு உதவி செய்ததுபோல சபையாரும் ஊழியராகிய எங்களுக்காக ஜெபம் செய்து, எங்களுடைய வேலையில் எங்களைத் தாங்கும்படியாக உங்களை அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இப்படிக்கு,
உங்களுக்காக ஜெபிக்கும்படிக்கு,
நியமிக்கப்பட்டிருக்கும் உங்கள் ஊழியன்,
அ.ஞா. ஜெபராஜ், அத்தியக்ஷர்.

நற்போதகம் - அக்டோபர் 1953

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரரே,

சென்ற இதழில், ஜெபத்திற்கு அனுகூலமாக, நான் கையாட விரும்பும் மூன்று ஏதுக்களைப்பற்றி எழுதினேன்.

1. ஜெப குறிப்பு நோட்டு : அதில் ஜெபத்திற்கான குறிப்புகளை எழுதிவைத்துக்கொண்டு தினந்தோறும், அல்லது சமயங்கிடைக்கும் போதெல்லாம் அதில் குறிக்கப்பட்டிருக்கும் ஆட்களுக்காகவும், விஷயங்களுக்காகவும் ஜெபித்து வரலாம். பெக்கஹாம் உவால்ஸ் அத்தியக்ஷரவர்கள், வாரத்திலுள்ள ஒவ்வொரு நாளுக்கும் ஒரு புஸ்தகமாக ஏழு நோட்டு புஸ்தகங்களும், தினந்தோறும் ஜெபிப்பதற்குரிய குறிப்புகளடங்கிய ஒரு நோட்டு புஸ்தகமும், ஆக எட்டு நோட்டு

புஸ்தகங்களைத் தாம் உபயோகித்து வருவதாகத் தெரிவித்தார்கள். ஒழுங்காக ஜெபம் செய்ய விரும்புகிறவர்கள் ஜெபக் குறிப்புகளடங்கிய ஒரு நோட்டு புஸ்தகமாவது உபயோகித்து வர வேண்டியது மிக அவசியம்.

2. **வெள்ளிக்கிழமைதோறும் ஜெப தினம்.** கடந்த சில வாரங்களாக வெள்ளிக்கிழமையை ஜெபதினமாகக் கழித்ததன் பயன் :-

(a) சரீரத்திற்கும் மனதிற்கும் ஆரோக்கியம்.
(b) அடுத்துவரும் ஞாயிறிலும், வாரத்து நாட்களிலும் செய்ய வேண்டிய ஊழியத்திற்கு ஆயத்தம்.
(c) பிறருக்காக ஜெபிக்க போதுமான அவகாசம்

நமது ஆண்டவராகிய இயேசு சுவாமியும், தமது ஊழியத்திற்கென்று தம்மை ஆயத்தம் செய்யும்படியாக, தனி தியானத்திற்கென்று காட்டுக்குச் சென்றாரல்லவா? "அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனந்தரமான ஓரிடத்திற்குப் போய், அங்கே ஜெபம்பண்ணினார்". (மாற்கு. 1: 35). சில சந்தர்ப்பங்களில் அவர் மலைக்குச் சென்று அதிகநேரம் ஜெபித்தாரென்றும் வாசிக்கிறோம். பன்னிரு அப்போஸ்தவரையும் தெரிந்தெடுக்குமுன் அவர் இரா முழுதும் ஜெபித்தார். (லூக். 6 : 12). ஐயாயிரம் புருஷர் அதிசயமாய் போஷிக்கப்பட்டபின், தம்மை இராஜாவாக்க ஜனங்கள் முயற்சித்ததைக் கண்ட இயேசு, சீஷர்களை அனுப்பிவிட்டு தனியாக மலையின் மேல் ஏறி சாயங்காலத்திலிருந்து விடியற்காலம் வரை ஜெபம் பண்ணினார். (மாற். 6 : 46; யோ. 6 : 15). தமது ஊழிய சம்பந்தமாய் தெய்வ சித்தம் இன்னதென்று அறிந்து கொள்ளத்தக்கதாக ஒரு மலையின் மேல் ஏறி தனியாக ஜெபம்பண்ணிக் கொண்டிருக்கையில், அவர் மருரூபமானார்; மோசே, எலியா ஆகிய இவ்விருவரின் மூலமாய்க் கடவுள் தமது சித்தத்தை அவருக்கு வெளிப்படுத்தினார் (மத் 17 : 1, 2; லூக். 9: 28 -31). மனிதரின் இரட்சிப்புக்காகத் தாம் மரண மடைய வேண்டியது அவசியமென்பதை அவர் திட்டவட்டமாக அறிந்து கொண்டது அந்நேரமே எனக் கூறலாம். மேலும், அவர் பாடுபடுவதற்கு முந்தின நாளிரவு நெடுநேரம் கெத்சேமனே தோட்டத்தில் சோதனைக்குட்படாதபடிக்கு ஜெபித்துக்கொண்டிருந்தார். (லூக். 22 : 39 - 43). ஜெபித்த இயேசு சோதனையை ஜெயித்தார்; ஜெபியாத சீஷர்கள் சோதனைக்குட்பட்டு ஓடிப்போனார்கள்.

தனிமையாகச் சென்று நெடுநேரம் ஜெபம் பண்ணுவது இயேசுவுக்கே அவசியமானால், பாவிகளுமாகிய நமக்கு, நெடுநேர ஜெபம் எவ்வளவு அதிக அவசியம்! வேலை ஜோலி அதிகம் தான்; ஜெபத்திற்காக செலவிடும் நேரம் சொற்பம்தான்! என்றாலும், இயேசுவைப் போல் ஜீவிக்கவும், ஊழியம் செய்யவும் விரும்புகிறவர்கள், இயேசுவைப் போல் ஜெபிக்கவும் வேண்டும். லூக்கா. 5:15, 16 ல் கூறப்பட்டிருக்கிறது யாதெனில், "திரளான ஜனங்கள் அவருடைய உபதேசத்தைக் கேட்பதற்கும், அவராலே தங்கள் பிணிகள் நீங்கிச் சவுக்கியமடைவதற்கும் கூடிவந்தார்கள்; **அவரோ வனாந்தரத்தில் தனித்துப்போய், ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார்**".

அத்தியட்சரின் ஜெப குறிப்புகள் அடங்கிய நோட்டுப் புத்தகத்திலிருந்து சில பக்கங்கள்





குருமாருக்கு ஞாயிற்றுக்கிழமை வேலை நாளாயிருப்பதால், வார நாட்களில் ஒரு தினத்தைத் தங்கள் தனி தியான நாளாக ஏற்படுத்திக் கொண்டு, அத்தினத்தை ஜெபத்திலும் தியானத்திலும் கழிப்பது அவர்களுடைய ஜீவியத்திற்கும் ஊழியத்திற்கும் பேருதவியாக இருக்கும். அவ்வாறே சபையாரும், ஞாயிற்றுக்கிழமையைத் தங்கள் ஜெப தியான நாளாகக் கழிக்கலாம். ஆலயத்திற்குச் செல்லும் நேரத்தைத் தவிர மற்ற நேரத்தை ஜெபத்திலும் தியானத்திலும் கழிக்கலாம். அதற்கு அனுகூலமாக, கையில் வேத புஸ்தகத்தையும், ஜெப ஞாபகக் குறிப்பு நோட்டு புஸ்தகத்தையும், சிறிது சிற்றுண்டியையும் எடுத்துக்கொண்டு, ஊருக்கு வெளியே இருக்கும் மலைக்கோ, காட்டிற்கோ, சத்திரத்திற்கோ, ஆற்றங்கரைக்கோ, மரத்தினடிக்கோ சென்று, தங்கள் நேரத்தை ஜெபத்திலும் வேத தியானத்திலும் செலவிடலாம். அப்பொழுது மரியாளுக்குக் கிடைத்த நல்ல பங்கு நமக்கும் கிடைக்குமல்லவா! (லூக். 10:42).

3. **சபையாரின் பெயர் ஜாபிதா.** தென்னிந்திய திருச்சபை மூல சட்ட புஸ்தகத்தில் அத்தியக்ஷரின் கடமையைப் பற்றி ஆறு குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் முதலாவது கூறப்பட்டிருப்பது, **மந்தையின் கண்காணிப்பு.** "அத்தியக்ஷாதீனத்திலுள்ள எல்லாக் கிறிஸ்தவர்கள் பேரிலும், விசேஷமாக, குருமார் பேரிலும், அத்தியக்ஷருக்கு கண்காணிப்பு உண்டு. கிறிஸ்துவின் கீழ் அவரது மந்தையின் பிரதம மேய்ப்பாக, தம்மாலான மட்டும் அத்தியக்ஷர், அத்தியக்ஷாதீனத்திலுள்ள **ஒவ்வொரு அங்கத்தினருடனும்** சம்பந்தப்பட்டு அத்தியக்ஷாதீனத்தின் உண்மையான ஆவிக்குரிய ஒற்றுமையை உண்டாக்க கடமைப்பட்டிருக்கிறார். **ஒவ்வொரு அங்கத்தினருடனும்** என்ற பதம் கவனிக்கப்படத்தக்கது. சென்ற வருஷ சங்கியைப்படி நம் அத்தியக்ஷாதீனத்தில் 1,31,577 கிறிஸ்தவர்கள் உண்டு. இவர்கள் ஒவ்வொருவருடைய ஆத்மீக நலனைக் கருதுவதும் அதற்காக உழைப்பதும் அத்தியக்ஷருடைய வேலை. ஜெபத்தின் மூலமாக மாத்திரம்தான் இவ்வூழியத்தைச் செய்ய முடியும். சபையாரின் பெயர்களடங்கிய ஜாபிதா கைவச மிருக்குமாகில், அவைகளின் உதவியைக் கொண்டு சபையாரெல்லாருக்காகவும் பேர் பேராக அத்தியக்ஷர் ஜெபிக்கலாம். இப்படி 1,31,577 பேருக்காகவும் ஜெபிப்பது கூடிய காரியமா என்று சிலர் கேட்கலாம். மனிதனால் இது கூடாததுதான். ஆனால் தெய்வ உதவியால் இது கூடும் என்றே நம்புகிறேன். தியான நாளாகிய வெள்ளிக்கிழமையிலும், நீண்ட பிரயாணம் செய்யும் சமயத்திலும், சபையாரின் ஜாபிதாவை வைத்துக்கொண்டு அவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக ஆண்டவரின் சமுகத்தில் நினைவு கூறலாம். குறிப்பிட்ட நாட்களுக்காக, விசேஷமாகவும் ஜெபிக்கலாம். அவ்வித ஜாபிதா தயாரிப்பதில் குருமார், சபை ஊழியரின் உதவி அதிக தேவை.

இப்படிக்கு,
உங்களுக்காக ஜெபிக்கும்படிக்கு,
நியமிக்கப்பட்டிருக்கும் உங்கள் ஊழியன்,
அ.ஞா. ஜெபராஜ், அத்தியக்ஷர்.

நற்போதகம் - ஜூன் 1954

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரரே,

கர்த்தருக்குச் சித்தமானால், நமது அத்தியக்ஷாதீன கவுன்சில் கூட்டம் 1955-ம் வருஷம் ஜனுவரி மாத மத்தியில் நடைபெறும். அதற்கு முன் நமது சபை கமிற்றிகளின் தேர்தல் நடத்தப்படும். தேர்தல்களின் நோக்கம் மேன்மையானது. திருச்சபையில் செய்யப்படும் பற்பல பணிவிடைகளில் குருமார் மாத்திரமல்ல, சபையாரும் கலந்து கொள்ளவேண்டுமென்பதுதான் தேர்தல்களின் நோக்கம். திருச்சபையானது கிறிஸ்துவின் சரீரம்; கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படவேண்டும்; அவருடைய ராஜ்யம் விருத்தியாகவேண்டும். அதற்காக திருச்சபைக்கும் ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும். கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் நான் செய்யவேண்டிய கடமைகளை செய்து வருகிறேனா என்று நம்மை நாமே சோதித்துப் பார்ப்போமாக. நமது கடமைகளையும் உத்தரவாதத்தையும் உணர்ந்தவர்களாய் சபை தேர்தல்களில் நாம் கலந்து கொள்ள வேண்டும். இக்கடமைகளை நிறைவேற்றக் கூடியவர்களையே நாம் கமிற்றிகளின் அங்கத்தினராகத் தெரிந்துகொள்ள வேண்டும். கமிற்றிகளின் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்படுபவர்கள், பரிசுத்தாவியும், விசுவாசமும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்கள் கமிற்றி அங்கத்தினராக தெரிந்தெடுக்கப்பட்டால், கமிற்றிகளின் ஊழியத்தின் மூலமாக கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படும்; கிறிஸ்துவின் ராஜ்யமும் விருத்தியாகும்.

அதற்குப் பதிலாக, சுயநலக்காரரும், தங்களைப் பெரியவர்களென்று பாராட்டுகிறவர்களும் சில வேளைகளில் துன்மார்க்கரும், தேர்தல் மூலமாக சபை கமிற்றிகளுக்குள் நுழைந்துவிடுகிறார்கள். அவர்களது நோக்கம், திருச்சபைக்கும் கிறிஸ்துவுக்கும் பணிவிடை செய்யவேண்டு மென்பதல்ல; சபைகளில் அதிகாரம் செலுத்த வேண்டுமென்பதே. கிறிஸ்து "ஊழியம் கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்யவே வந்தார்." அதை பகிரங்கமாகக் காட்டும்படியாகவே, ஒரு அடிமையைப் போல சீஷர் கால்களைக் கழுவினார். "ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவின துண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்" என்று சொன்னார். பணிவிடை செய்யவேண்டு மென்ற கிறிஸ்துவின் சிந்தையுடையவர்களையே சபை கமிற்றி அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கவேண்டுமே யல்லாமல் "எனக்கு வோட் கொடுங்கள்"என்று கேட்பவரைத் தெரிந்து கொள்ளவே கூடாது. "எனக்கு வோட் கொடுங்கள்" என்று கேட்பவர், பஞ்சாயத்து போர்டு, கவுண்சில், ஜில்லா போர்டு, சர்க்கார் சட்ட சபை முதலானவைகளில் அங்கத்தினராயிருக்க யோக்கியதையுடையவராயிருக்கலாம். ஆனால் திருச்சபை சம்பந்தமான கமிற்றிகளில் அங்கத்தினராயிருக்க அவர் சற்றும் யோக்கியதையுடையவரல்ல. "தன்னைத்தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்; "தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்". உலக விஷயங்களிலும், உலகத்தார் பார்வையிலும் அவர் பெரியவராயிருக்கலாம், ஆனால் ஆண்டவருடைய

பார்வையில் அவர் மிகச் சிறியவர். ஆகையால் "எனக்கு வோட் கொடுங்கள்" என்று கேட்பவரைச் சபை கமிற்றி அங்கத்தினராக நாம் ஒருபோதும் தெரிந்தெடுக்கக்கூடாது.

கமிற்றிகளில் அங்கத்தினராகி அதிகாரம் செலுத்தவேண்டுமென்று விரும்புகிற சிலர், தாங்களாக எனக்கு வோட் கொடுங்களென்று சொல்வதில்லை; ஆனால் தங்கள் சிநேகிதர் மூலமாக "இவருக்கு வோட் கொடுங்கள்", "இவருக்கு வோட் கொடுங்கள்" என்று தங்களுக்கு வோட்டுகளைச் சம்பாதித்துக் கமிற்றி அங்கத்தினராகிவிடுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்திருக்கும் ஓநாய்கள். அவர்கள் மூலமாக திருச்சபைக்கு ஏற்படும் நஷ்டம் கொஞ்சமல்ல, அவர்கள் மந்தையைப் பாதுகாப்பவர்களாக அல்ல, பாழாக்குகிறவர்களாகவே கமிற்றிகளில் உட்கார்ந்து கிரியை செய்கிறார்கள். "என்னோடிராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடு சேர்க்காதவன் சிதறடிக்கிறான்" என்று கிறிஸ்து சொன்ன வார்த்தை பொய்யாகாது.

ஆகையால் வோட் உரிமையைப் பெற்றிருக்கும் ஒவ்வொருவரும், வோட் கொடுக்க அழைக்கப்படுங்காலத்தில் ஊக்கமான ஜெபத்தோடும், அதிக ஜாக்கிரதையோடும் வோட் கொடுக்கவேண்டும். பரிசுத்தாவியும், விசுவாசமும், ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருப்பவர்களுக்கு மாத்திரமே சபை தேர்தலில் வோட் கொடுக்கவேண்டுமேயன்றி, மற்றெந்தக் காரணத்தையிட்டும் மற்றவர்களுக்கு வோட் கொடுக்கலாகாது. சுயநலப் பிரியருக்கும், தங்களைப் பெரியவர்களென்று பாராட்டுபவருக்கும் வோட் கொடுப்பவர்கள், கிறிஸ்து வேண்டாம், பரபாஸ் வேண்டும் என்று கேட்டவர்களுக்குச் சமானமாவர். அவர்கள் மூலமாகவே, தேர்தல் சமயத்தில் சபைகளுக்குள் பிரிவினைகளும் கட்சிகளும் உண்டாகின்றன.

கிறிஸ்துவில் அன்புகூர்ந்து, அவருடைய திருச்சபையைப் பாதுகாக்க விரும்புகிற கிறிஸ்துவின் பிள்ளைகள் யாவரும் ஊக்கமான ஜெபத்துடனும், பயபக்தியுடனும் தங்கள் வோட் உரிமையை உபயோகிக்க வேண்டுமென்று அதிகப் பணிவுடன் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தேர்தல் காலத்தில் சபைகளில் கட்சி பிரிவினை ஏற்படாமல், ஆண்டவருக்குப் பிரியமானவர்களும், ஆண்டவருடைய ராஜ்யவிருத்தியை நாடுகிறவர்களுமான தெய்வ பக்தர்கள் கமிற்றி அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்பட வேண்டுமென்று ஊக்கமாக ஜெபிக்கும்படியாக உங்களனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,
உங்கள் அன்புள்ள ஊழியன்,
அ.ஞா. ஜெபராஜ், அத்தியக்ஷர்.

நற்போதகம் மே, 1961

கர்த்தருக்குள் பிரியமான மக்களே,

சென்ற மாத நற்போதகத்தில் "**ஆத்மீக வளர்ச்சி**" எனும் பொருள் பற்றி எழுத ஆரம்பித்தேன். ஆத்மீக வளர்ச்சியை திருஷ்டாந்தப்படுத்த, ஒட்டு மாங்கன்று உபயோகிக்கப்பட்டது. ஓர் ஒட்டு மாங்கன்று வளருவதற்கு அனுகூலங்கள் மூன்று, அவை : **வேலி, ஜலம், உரம்**. அதைப்போல ஆத்மீக வளர்ச்சிக்கு அனுகூலமானவை **வேதம், ஜெபம், ஊழியம்.** செடியைப் பாதுகாப்பதற்கு வேலி எவ்வாறு அவசியமோ, அவ்வாறே ஆத்துமாவைப் பாதுகாப்பதற்கு வேதம் மிக அவசியம். ஆகையால் வேதமாகிய வேலி என்று கூறப்பட்டது.

இரண்டாவது **ஜெபமாகிய ஜலம்**, மாங்கன்றுக்கு ஜலம் மகா அவசியம். அவ்வாறே ஆத்மீகவளர்ச்சிக்கு ஜெபம் மகா அவசியம். கடவுளிடம் உறவாடுவதே ஜெபம், பிள்ளை தகப்பனிடம் அல்லது தாயிடம்பேசி உறவாடுவது போல் கடவுளின் பிள்ளைகளாகிய நாமும் அவருடன்பேசி உறவாட வேண்டும். இவ்விஷயத்தில் இயேசு நமக்கு முன்மாதிரி. அவர் எவ்விதம் பிதாவினிடம் உறவாடினாரோ, அவ்வாறே நாமும் உறவாடுவோமாக. இயேசு அதிகாலையில் ஜெபித்தார் (மாற். 1:35). இயேசு அடிக்கடி ஜெபித்தார். உதாரணம் : ஞானஸ்நானம் பெற்று கரையேறியவுடன் (லூக் 3:21), அப்பங்களை ஆசீர்வதிக்கையில் (லுக் 9:16), 5000 பேர் போஷிக்கப்பட்ட பின் (லூக். 9:18), 70 சீஷர் திரும்பி வந்தவுடன் (லூக் 10:21), லாசரு உயிரோடெழுப்பப்படுகையில் (யோ. 11:41,42), கிரேக்கர் இயேசுவைக் காண வருகையில் (யோ 12:27,28), சிலுவை மரத்தில் தொங்குகையில் (லூக் 23:34,46) ஜெபித்தார். வேலை செய்யும்போதே பிதாவிடம் பேசுவது அவருக்குப் பழக்கமாயிருந்தது.

மேலும், சில விசேஷித்த சந்தர்ப்பங்களில் யேசு அதிக நேரம் ஜெபித்தார். உதாரணம் : சீஷர் தெரிந்தெடுக்கப்படுமுன் இராமுழுவதும் ஜெபித்தார் (லூக். 6:12,13). ஊழியத்திற்கு ஆயத்தமாக தனித்துப் போய் ஜெபித்தார் (லூக். 5:16). தம்மை மேசியா என்று வெளிப்படையாகக் காண்பிக்குமுன் மறுரூபமலையில் அதிகநேரம் ஜெபித்தார் (லூக் 9:16). கெத்சேமனே தோட்டத்தில் ஆத்தும வியாகுலமடைகையில் நீண்ட நேரம் ஜெபித்தார் (லூக் 22:44).

இயேசு தமது வாழ்க்கையில் எவ்வண்ணமாக அதிகாலையில், அடிக்கடி அதிக நேரம் ஜெபித்தாரோ அவ்விதமாக நாமும் ஜெபிக்க வேண்டும். அது நமது ஆத்மீக வளர்ச்சிக்கு ஜலம் வார்ப்பது போலாகும். நாலுவகை ஜெபங்களுண்டு. அவை:- **தனி ஜெபம், குடும்பஜெபம், கூட்டு ஜெபம், சபைஜெபம்.** தனி ஜெபத்தைப் பற்றி ஆண்டவர் கூறியிருப்பது :- " நீயோ ஜெபம் பண்ணும்போது, உன் அறை வீட்டிற்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு". தனிஜெபம் செய்கையில் நம் எண்ணம் அங்குமிங்கும் செல்லாதபடி, தனி அறைக்குள் சென்று கதவைப் பூட்டிக்கொண்டு நம் காது கேட்க

சற்று சத்தமாக ஜெபிப்பது நல்லது. அதற்கு வசதியில்லாவிட்டால் இயேசு செய்தது போல வனாந்தரத்திற்கோ, மலைக்கோ, தோட்டத்திற்கோ ஊருக்கு வெளியே சென்று ஒருவரும் பக்கத்திலிராத சமயத்தில் சற்று சத்தமாக ஜெபிக்கலாம். (1 சாமு. 1:13) இவ்வாறு ஜெபிப்பது நமது சிந்தனை சிதறாதபடியும், மனது அங்கு மிங்கும் அலையாதபடியும் நம்மைக் காக்கும். **ஒரு ஆளிடம் பேசும் வண்ணமாகவே இயேசுவிடம் பேசப்பழகவேண்டும்.**

"குடும்ப ஜெபம் இல்லாத வீடு கூரை இல்லாத வீடு" என்பதோர் ஆன்றோர் மொழி. குடும்ப அங்கத்தினருக்குள் ஐக்கியத்தை உண்டு பண்ணுவது குடும்ப ஜெபம். தினம் ஒரு வேளையாவது தாய் தகப்பன் பிள்ளைகளனைவரும் கூடி ஒரு பாட்டுப்பாடி, ஒரு சிறு வேதபாகம் வாசித்து, அவர்களுள் யாராவது ஒருவர் ஜெபித்து, கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லி, ஆசீர்வாதத்துடன் முடிக்கலாம். குடும்பத்தில் கஷ்டங்கள் கவலைகள் வருகையில் குடும்ப ஜெபம் கடவுளண்டை நம்மை நெருங்கச் சேர்க்கும்.

கூட்டு ஜெபம். மத். 18:19, 20 - ல் கூறியபடி இரண்டு பேர், மூன்று பேர் கூடி ஏகமனதுடன் ஒரே காரியத்துக்காக ஜெபிப்பது அதிக பலன் தரும். இயேசுவின் பிரசன்னம் அங்கு விசேஷித்த விதமாக இருக்கும் என்பது ஆண்டவரின் வாக்கு. இவ்வாக்குத் தத்தத்தை நமக்கு சொந்தமாக்கிக் கொள்வோமாக.

சபை ஜெபம். சபையாகக்கூடி ஞாயிற்றுக்கிழமைகளிலும் சில ஆலயங்களில் தினந்தோறும் கூடி ஆராதிப்பது வழக்கமாக இருக்கின்றது. அதில் குறைந்தது 5 நிமிஷமாவது, விசேஷித்த ஸ்தோத்திரங்களை ஏறெடுப்பதும், விண்ணப்பங்களைச் செய்வதும், கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய ஜீவியத்தை வளரச் செய்யும்.

இந்நால்வகை ஜெபங்களிலும் அதிகமதிகமாகப் பங்குபெறுவோமாக.

இப்படிக்கு

கிறிஸ்துவுக்குள் உங்கள் ஆத்மீகத் தந்தை
அ.ஞா. ஜெபராஜ், அத்தியக்ஷர்.

நற்போதகம் ஜூன், 1961

கர்த்தருக்குள் பிரியமான மக்களே,

கடந்த இரு மாதங்களில் **ஆத்மீக வளர்ச்சி** எனும் பொருள்பற்றி எழுதியிருக்கிறேன். ஓர் மாங்கன்று வளருவதற்கு அவசியமானவை மூன்று. அவை: வேலி, ஜலம், உரம். அவ்வண்ணமே ஆத்மீக வளர்ச்சிக்குத் தேவையானவை மூன்று. அவை : வேதம், ஜெபம், ஊழியம். இந்நிருபத்தில் ஜெபம் என்பதைப்பற்றி சற்று விரிவாக எழுத ஆசிக்கின்றேன்.

சகோதரரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள், என்று பவுல் அப்போஸ்தலன் கூறுகின்றார். (1 தெச. 5:25). வேதத்தை ஆராய்ந்து பார்க்கும்போது பின்வரும் 5 கூட்டத்தாருக்காக ஜெபிக்க ஏவப்படுகிறோம்:

1. **பகைவர்கள் :** மத் 5 : 44,45. "உங்கள் சத்துருக்களை சநேகியுங்கள்; உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், துன்பப்படுத்து கிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்" என்று இயேசு கூறியுள்ளார். அவர் கூறியவாறே செய்தும் காண்பித்தார். அவர் சிலுவை மரத்தில் தொங்கிய பொழுது முதலாவது கூறிய வசனத்தில், ''பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே'' (லூக். 23 : 34) என்று பகைவர்களுக்காக ஜெபித்தார். தினந்தோறும் நம்மைப்பகைப்பவர்களுக்காக ஜெபிக்கவேண்டும்.
2. **பணிவிடைக்காரர் :** எபி 13 : 18. "எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்" என்று எபிரேயர் நிருப ஆக்கியோனும் கூறுகின்றார். பணிவிடைக்காரர் தேவ வசனத்தைப் போதிப்பவர்கள் ; ஆவிக்குரிய ஜீவியத்தில் ஜனங்களை நடத்துபவர்கள்; ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுபவர்கள்; ஆத்துமாக்களுக்காக விழித்திருப்பவர்கள். (எபி. 13:7,17). ஆகையால் சபையாரின் ஜெபம் பணிவிடைக்காரருக்குத் தேவை.
3. **பரிசுத்தவான்கள் :** எபே. 5:18. "சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்" என்று பரி. பவுல் கூறுகிறார். பரிசுத்தவான்கள் (saints) என்ற வார்த்தை, பரிசுத்த வாழ்க்கைக்கென்று பிரித்தெடுக்கப்பட்டவர்கள் எனக் குறிக்கும். ஆகையால் பவுல் தமது நிருபத்தில், கிறிஸ்தவர்களையே பரிசுத்தவான்கள் எனக் கூறுகின்றார். (2 கொரி 1 : 1, எபே. 1 :1). கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையில் அங்கங்களாக அமையப்பெற்றிருக்கும் கிறிஸ்தவர்களுக்காகவும் நாம் ஜெபிக்க வேண்டும்.
4. **புற மதஸ்தர் :** பவுல் புறமதஸ்தரான அகிரிப்பா இராஜாவின் முன் கைதியாக நின்ற சமயத்திலும் "நீர் மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும்.... என்னைப் போலாகும்படி தேவனை வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று கூறினார் (அப். 26 : 29). புற மதஸ்தர் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொள்ளவேண்டுமென்பது அவரது அவா. அவர்களுக்காக அவர் எப்பொழுதும் ஜெபித்துக்கொண்டிருந்தார். சிறையிலிருக்கையில் சிறைச்சாலைக் காரனுக்காக ஜெபித்தார் (அப். 16 : 25). அவன் குணப்பட்டான். புறமதஸ்தர் விசுவாசிகளாகும்படி அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும்.
5. **பற்பலர் :** 1 தீமோ. 2 : 1. "எல்லா மனுஷருக்காகவும், விண்ணப்பங்களையும், ஜெபங்களையும், வேண்டுதல்களையும், ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும்." பற்பல நிலமையுடையோர், உதாரணமாக, வியாதியஸ்தர், இழக்கக் கொடுத்தோர், கவலையிலிருப்பவர்கள்; தங்களுக்காக ஜெபம்



செய்யவேண்டுமென்று கேட்பவர்கள்; இனத்தார் முதலானவர்களுக்காகவும் நாம் ஜெபிக்கவேண்டும்.

மேற்கூறிய 5 குறிப்புகளையும் ஞாபகப்படுத்திக்கொள்ள 5 விரல்களுடன் ஓர் கையின் படம் போடப்பட்டிருக்கிறது.

முன் ஆலோசனை கூறப்பட்டதுபோல சிறு நோட்டுப் புத்தகம் ஒன்று தயாரித்து, அதில் ஒரு பக்கத்தில் வேதம் என்றும், மறுபக்கத்தில் ஜெபம் என்றும் குறிக்கப்படவேண்டும். ஜெபம் என்ற பாகத்தில் இக்கையின் உருவப்படம் வரைந்துகொள்ளலாம். (முதல் பக்கத்தில் பகைவர்களுடைய பெயர்கள் ; இரண்டாம் பக்கத்தில் பணிவிடைக்காரருடைய பெயர்கள் (அத்தியக்ஷர், குருக்கள், உபதேசிமார், உபாத்திமார், கோவில் வேலைக்காரர்), மூன்றாம் பக்கத்தில் சபையார் - கமிற்றி அங்கத்தினர் ; குடும்பத் தலைவர்களின் பெயர்கள். (இது பெரிய ஜாபிதாவாக இருக்குமாதலால் பிரத்தியேகமான ஜாபிதா வைத்துக்கொள்வது நலம்). நான்காம்

பக்கத்தில், புறமதஸ்தர் - (நம்முடன் நெருங்கிப் பழகும் புறமதஸ்தர் ; ஊழியத்தில் சம்பந்தப்பட்டவர்கள்) - இவர்களுடைய பெயர்கள். ஐந்தாம் பக்க முதல் பல பக்கங்களில், வியாதியஸ்தர், இனத்தார், ஜெபம் செய்யக் கேட்போர், தேச அதிகாரிகள், மற்றும் விஷயங்கள் - இவைகளைக் குறித்துக்கொண்டு ஒழுங்காக ஜெபிக்க வேண்டும்.

ஜலம் மரத்திற்குத் தேவையாயிருப்பதுபோல ஜெபமும் ஆத்மீக வளர்ச்சிக்கு இன்றியமையாதது, ஒழுங்காக ஜெபிப்போமாக.

இப்படிக்கு
கிறிஸ்துவுக்குள் உங்கள் ஆத்மீகத் தந்தை
அ.ஞா. ஜெபராஜ், அத்தியக்ஷர்.

நற்போதகம் ஜூலை, 1961

கிறிஸ்துவுக்குள் பிரியமான மக்களே,

கனி தரும் விருட்சத்திற்கு அவசியமாயிருப்பவை வேலி, ஜலம், உரம். அவ்வாறே ஆவியின் கனி தரும் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அவசியமானவை **வேதம், ஜெபம், ஊழியம்.** கடந்த மூன்று இதழ்களிலும் வேதத்தைப் பற்றியும், ஜெபத்தைப் பற்றியும் சிந்தனை செய்தோம். இம்மாத இதழில் ஊழியத்தைப் பற்றி சிந்திப்போம்.

நம் அத்தியக்ஷாதீனத்தில் ஆறு வகை விசேஷித்த ஊழியம் நடத்தப்பட்டு வருகின்றது. அதை விளக்கிக் காண்பிப்பதற்கென்று ஓர் சிறுபடம் இம்மாத நற்போதகத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. அதன் விபரம் யாதெனில் :-

1. ஒவ்வொருவர் கையிலும் ஓர் **வேத புத்தகம்** : அதனுள் ஓர் வேத வாசிப்பு கார்டு. வேத வசனம் ஞானப்பால் (1 பேது 2 : 3); வேத வசனம் ஆவியின் பட்டயம் (எபே. 6 : 17); வேத வசனம் ஆத்தும தீபம் (சங். 119 : 105). வேத வாசிப்புக் கார்டை உபயோகித்து வேகத்தை ஒழுங்காதக தினந்தோறும் வாசிக்கவேண்டும். உங்கள் ஒவ்வொருவருக்கும் வேத புத்தகம் இருக்கிறதா? அதனுள் வேத வாசிப்புக் கார்டு இருக்கிறதா? அதைத் தினந்தோறும் உபயோகிக்கின்றீர்களா?

2. ஒவ்வொரு குடும்பத்திலும் **குடும்ப ஜெபம்** : "குடும்ப ஜெபம் இல்லாத வீடு கூரை இல்லாத வீடு". குடும்ப ஜெபம் நம் ஆத்மீக வளர்ச்சிக்கும், குடும்ப ஐக்கியத்திற்கும் மிக அவசியம். மாதா, பிதா, மக்கள் யாவரும் ஒரு நாளில் ஒரு முறையாவது ஒன்றாகக் கூடி கடவுளை ஆராதிக்க வேண்டும். ஒரு பாட்டு, ஒரு வேத பாகம், ஒருவர் அல்லது பலர் ஜெபித்தல். மதுரை அத்தியக்ஷரவர்களின் வீட்டில் நடைபெறும் குடும்ப ஜெபத்தில், ஒவ்வொருவரும் அந்நாளில் கற்றுக்கொண்ட ஒரு வேத வாக்கியத்தை மனப்பாடமாகக் கூறுகின்றனர். நம் குடும்பத்தில் ஆண்டவரின் ஆசீர்வாதம் என்றும் தங்க வேண்டாமா? குடும்ப ஜெபம் செய்யுங்கள்.

3. ஒவ்வொரு சபையிலும் **திருவசன ஊழியம்** : ஆலயம், பாடசாலை, வீடு இவைகளின் முன் ஓர் கரும்பலகையில் அந்தந்த வாரத்துக்குரிய வேத வசனத்தை எழுதித் தொங்க வைப்பது நல்லது. ஆத்துமாக்களை உயிர்ப்பிக்கும் தேவ வசனம் கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல, கிறிஸ்தவரல்லாதாருக்கும் தேவை. ஆராதனையின் மத்தியில் பாடம் வாசிக்கு முன் அவ்வாரத்து மனப்பாட வசனத்தை யாவரும் சேர்ந்து சொல்லலாம்.

4. ஒவ்வொரு பாஸ்றறரேற்றிலும் ஒரு **கன்வென்ஷன்** : தகுந்த ஆயத்தத்துடன் வருஷத்திற்கொருமுறை ஒரு ஆவிக்குரிய கன்வென்ஷன் ஒழுங்கு செய்வது நல்லது. பக்கத்து கிராமங்களிலிருக்கும் கிறிஸ்தவர்களுக்கும் கிறிஸ்தவரல் லாதாருக்கும் அறிவிப்புக் கொடுத்து ஜெபத்துடன் நடத்தப்படுமாகில், அது அதிகப் பிரயோஜனமளிக்கும். அதன் மூலமாகப் பலர் இரட்சிக்கப்பட ஏதுவாகும்.

5. ஒவ்வொரு சர்க்கிளுக்கும் ஓர் **மிஷனெரி ஸ்தானம்** : தங்களுடைய சர்க்கிள் எல்கைக்கு வெளியேயுள்ள ஒரு பாஸ்றறரேற்றைத் தங்கள் மிஷனெரி ஸ்தானமாகத் தெரிந்துகொண்டு அதில் சமயா சமயங்களில் சுவிசேஷ ஊழியம் செய்வது. இத்தகைய ஊழியத்திற்கென்று சில சர்க்கிள்களில் விசேஷித்த ஜெபக்கூட்டங்கள் வைத்து, காணிக்கை சேகரித்து, சுவிசேஷ ஊழியரை நியமித்திருக்கின்றனர். சாட்சி வார ஊழியத்தையும் தங்கள் மிஷனெரி ஸ்தானத்திலேயே போய் நடத்துகின்றனர்.

6. ஒவ்வொரு புற மதஸ்தர் வீட்டுக்கும் ஓர் **சுவிசேஷப் பங்கு** : வீடு தவறாமல் இவ்வூழியம் நடைபெறுவதற்கு ஓர் விசேஷித்த துண்டுத் தாள் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அத்துண்டுத் தாள் இலவசமாகவும் சுவிசேஷப் பங்குகள் அரை கிரயத்துக்கும் அத்தியக்ஷாதீன ஆபிஸில் கிடைக்கும். முதலாவது துண்டுத் தாள் வீடு வீடாகக் கொடுக்கப்பட வேண்டும். சில நிமஷங்களுக்குப் பின் சுவிசேஷப் பங்குகள் ஒவ்வொரு வீட்டிற்கும் கொண்டு போய், கொடுக்கப்படவேண்டும். அதை அவர்கள் வாங்கிப் பார்க்க அவகாசம் கொடுக்க வேண்டும். பாளையங்கோட்டைக்கருகில் மகமதியர் நிறைந்துள்ள மேலப்பாளையத்தில் இவ்வூழியத்தின் மூலமாக 2000 பிரதிகள் விற்கப்பட்டன. அப்பிரதிகள் மூலமாக மக்கள் கிறிஸ்துவை அறிவதற்கு ஏதுவாகும்.

நாம் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு ஊழியத்தில் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும். அது நம் வாழ்க்கையில் விசேஷித்த ஆசீர்வாதத்தைத் தரும்.

இப்படிக்கு,
கிறிஸ்துவுக்குள் உங்கள் ஆத்மீகத் தந்தை
அ. ஞா. ஜெபராஜ், அத்தியக்ஷர்.

நற்போதம் - செப்டம்பர் 1970

கிறிஸ்துவுக்குள் அன்பான மக்களே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

நெல்லை அத்தியக்ஷாதீனப் பேராயராக நான் எழுதும் இறுதி நிருபம் இது என்ற நினைக்கிறேன்.

"கர்த்தர் நல்லவர் அவர் கிருபை என்றுமுள்ளது"

நான் பிறந்தது, வளர்ந்தது, படித்தது, வேலை செய்தது யாவும் இவ்வத்தியக்ஷாதீனத்திலேயே.

1905 மார்ச் 28ல் புதுக்கோட்டை சர்க்கிளைச் சேர்ந்த சேர்வைகாரன்மடம் என்னும் சிற்றூரில் பிறந்து, வளர்ந்து, ஆரம்ப கல்வி பயின்றேன். வீடுகளில் ஞாயிறு இரவுகளில் நடக்கும் ஜெபக் கூட்டங்களுக்கு போகும்போது, விளக்குத் தூக்குவதும், பாட்டுகள் பாடும்போது ஜாலர் அடிப்பதும் எனக்கு அதிகப் பிரியம்.

8 வயதாயிருக்கையில், சுமார் 2 1/2 மைல் தூரத்திலுள்ள சாயர்புரம் நடுநிலைப்பள்ளியில் சேரப் போகும் நாளின் முந்தின இரவில், ஆலயத்தில் நடைபெற்ற ஆராதனையில் பிரசங்கம் செய்தவர் அப்பொழுது இருந்த சிறுவர் ஊழியர் A. மனுவேல் அவர்கள். (பின்னால் குரு அபிஷேகம் பெற்றவர்கள்) பிரசங்க வாக்கியம். "**கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்**" இவ்வாக்கியம் வெகு ஆழமாக என் மனதில் பதிந்தது.

13ம் வயதில் பேய்க்குளம் என்ற கிராமத்திற்கு ஒரு குழுவாக சென்று சுவிசேஷ ஊழியம் செய்த சமயத்தில் முதல் பிரசங்கம் செய்தேன். அதில் எனக்கு ஊக்கம் கொடுத்தவர் கனம் **A.** வேதமாணிக்கம் ஐயரவர்கள்.

சாயர்புரம் பாடசாலையில் 5 ஆண்டுகளும், தூத்துக்குடி கால்ட்வெல் உயர்நிலைப் பள்ளியில் 4 ஆண்டுகளும் கல்விகற்றேன். அங்கிருக்கும் பொழுது எனது 17ம் வயதில் இயேசு கிறிஸ்துவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டேன். அதில் உதவி செய்தவர் திருநெல்வேலியிலும், பாளையங்கோட்டையிலும் பல வருஷங்களாக ஆசிரியராயிருந்த திரு. பால் செல்லப்பா அவர்கள். அச்சமயம் ஆண்டவரால் எனக்கு அருளப்பட்ட திருவசனம் 1 கொரி. 3 : 16, 17.

"**நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம்**". இந்நாள் பரியந்தம் அடிக்கடி இவ்வாக்கியம் என் மனதில் வருவதுண்டு.

பின்பு, இன்றர்மீடியேற் வகுப்புகள், திருநெல்வேலியில் ஷாப்டர் உயர்நிலைப் பள்ளியில் நடத்தப்பட்ட சி.எம்.எஸ். கல்லூரியிலும், பி.ஏ. வகுப்புகள் , திருச்சிராப்பள்ளியிலுள்ள எஸ்.பி.ஜி. கல்லூரியிலும் படித்தேன். அக்காலத்தில் என் ஆவிக்குரிய ஜீவிய வளர்ச்சிக்கு அனுகூலமாயிருந்தது Young Men's Volunteer Missionary Band. விடுமுறை காலத்தில் இரு நாட்கள் தாளையூத்து சத்திரத்தில் தியானக் கூட்டம் நடக்கும்; பின்பு ஏதாவது ஓர் கிராமத்தில் சுவிசேஷ ஊழியம் நடைபெறும். அதில் விசேஷித்த பங்கு எடுத்தது நாசரேத் டாக்டர் ஆர். வேதபோதகம் அவர்கள்.

கல்லூரிப் படிப்பை முடித்து சில மாதங்கள் வீட்டில் இருக்கையில், பக்கத்திலுள்ள குலையன்கரிசல் என்ற கிராமத்திலுள்ள பல ஆசிரியர்கள், ஒரே நாளில் தங்கள் வேலையை ராஜினாமா செய்துவிட்டார்கள். அங்குள்ள குரு என்னிடம் வந்து கேட்டபொழுது நான் சந்தோஷமாக அவ்வூருக்குச் சென்று, அவ்வாரம்பப் பாடசாலையில் 40 நாட்கள் ஆசிரியராகப் பணியாற்றினேன்.

பின்பு தெய்வ பணிவிடைக்கு ஒப்புக்கொடுத்தேன்; ஏற்றுக் கொள்ளப்பட்டேன். ஒரு வருடம் சாயர்புரத்தில் உபதேசியாராகவும், அடுத்த வருடம் 3 மாதங்கள் பண்ணைவிளையிலும், மற்ற மாதங்கள் சாட்சியாபுரத்திலும் சுவிசேஷ ஊழியம் செய்தேன். சுவிசேஷ ஊழியக் குழு தலைவர் அப்பொழுது குருவாக இருந்து பின்னால் அத்தியக்ஷரான கனம் S.C. நீல் ஐயரவர்கள்.

1930 - 1933 கல்கத்தா பிஷப் கல்லூரியில் வேத சாஸ்திர மாணவன். தலைவர், மகாகனம் H. பெக்கன்ஹாம் உவால்ஷ் அத்தியக்ஷரவர்கள்; உப தலைவர், கனம் தாமஸ் சித்தர் ஐயரவர்கள்.

12-3-1933ல் கல்கத்தாவிலுள்ள Scott's Lane பரி. பவுலின் ஆலயத்தில் டீககன் அபிஷேகம்.

1933-36 ஆற்றங்கரை பாஸ்ற்றரேற்று குரு.

10-1-1934 நாசரேத் பரி-யோவான் ஆலயத்தில் திருமணம்.

4-3-1934 நாகலாபுரம் உயிர்த்தெழுதலின் ஆலயத்தில் குரு அபிஷேகம்.

1936-39 பிள்ளையன்மனை பாஸ்ற்றரேற்று குரு; நாசரேத் வேத சாஸ்திரக் கல்விசாலையில் உதவி ஆசிரியர்.

1939-41 திருமறையூர் வேத சாஸ்திர கல்விச்சாலையில் ஆசிரியர்.

1941-45 கீழக்கரை சர்க்கிள் குரு.

1945-46 சுவிசேஷக் குழு தலைவர்.

1946-47 மகாகனம் G.T. செல்வின் அத்தியக்ஷரவர்களின் சேஷப்ளன்.

1947-49 பம்பாயில் சமூக சேவை கல்லூரியில் படிப்பு

1949-50 ஆகஸ்டு-அமெரிக்காவில் சிக்காக்கோ பல்கலைக் கழகத்தில் வேத சாஸ்திரக் கல்வி.

1950 செப்-டிசம். இங்கிலாந்தில் பர்மிங்ஹாம் பட்டணத்தில் வேத சாஸ்திரக் கல்வி.

1951 ஜனு-மே இடையற்காடு பாஸ்ற்றரேற்று குரு.

1951 ஜூன் - 1953 ஜூன் முடிய பாளையங்கோட்டை சர்க்கிள் குரு.

1953 ஜூலை 2. அத்தியக்ஷர் அபிஷேகம்.

1970 செப்.30. நெல்லை அத்தியக்ஷாதீன சேவையினின்று ஓய்வு பெறுதல்.

நான் பேராயராக பணியாற்றிய காலத்தில் சுமார் 3 ஆண்டுகள் தென் இந்திய திருச்சபை உப பிரதமப் பேராயராக நியமிக்கப்பட்டேன். ஒருமுறை இங்கிலாந்து தேசத்தில் கந்தர்புரி பட்டணத்தில் நடத்தப்பட்ட அத்தியக்ஷர்களின் மாநாட்டிலும், ஒருமுறை மேற்கு ஜெர்மனியில் பெர்லின் நகரத்தில், பில்லிகிரகாம் பண்டிதரின் சுவிசேஷக் குழுவினரால் நடத்தப்பட்ட அகில உலக சுவிசேஷ மாநாட்டிலும், ஒருமுறை புதுடில்லியில் நடைபெற்ற அகில உலக திருச்சபை மாநாட்டிலும் பங்கு பெறும் சிலாக்கியம் கொடுக்கப்பட்டது.

1966ம் வருட இறுதியில் ரோமாபுரிக்குச்சென்று மாண்புமிக்க போப் ஆண்டகையைப் பார்த்து பேசும் வாய்ப்பும் கிடைத்தது. அவ்வருட கிறிஸ்மஸ் தினத்தில் பெத்லேகேமிலும், எருசலேமிலும் நடைபெற்ற கிறிஸ்து ஜயந்தி ஆராதனைகளிலும் பங்கெடுத்தேன். நம் ஆண்டவராகிய இயேசு பிறந்த இடம் ஆராதித்த இடம் நடந்த பாதை, பவனி சென்ற பாதை, கெத்செமனே தோட்டம், நியாய விசாரணை செய்யப்பட்ட இடம், சிலுவையில் அறையப்பட்ட இடம், அடக்கம் பண்ணப்பட்ட இடம், பரத்துக்கேறின இடம், யோர்தான் நதி இவைகளைப் பார்க்கப் பார்க்க பரவசமாயிருந்தது.

"கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் நான் என்னத்தைச் செலுத்துவேன்?"

இக் கேள்வி பலமுறைகள் என் மனதில் இன்னும் வந்து கொண்டே இருக்கிறது. என் மனைவி மறுமைக்குட்படுவதற்கு சில நாட்களுக்கு முன் பெங்களூரில் நடைபெற்ற நான்காண்டு பெண்கள் மாநாட்டில் கொடுத்த பிரசங்கத்திலும் இதே கேள்வி பன்முறை கேட்கப்பட்டது. அதற்கு உத்தரவாக சங்கீதக்காரனே பதில் சொல்லி இருக்கிறார்.

"**இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்வேன்**"

உங்கள் மத்தியில் பணியாற்றிய காலம் முழுவதும், உங்கள் ஜெபத்தினாலும், ஒத்துழைப்பினாலும், அன்பினாலும், அனுதாபத்தினாலும் நீங்கள் எனக்கு பேருதவி புரிந்திருக்கிறீர்கள். உங்கள் யாவருக்கும் என் மனமார்ந்த நன்றியை கூறிக்கொண்டு உங்களிடம் விடை பெற்றுக் கொள்கிறேன்.

கடவுள் உங்களனைவரையும், விசேஷமாய் நம் அத்தியக்ஷாதீனத்தையும் ஆசிர்வதிப்பாராக.

"**ஒன்று செய்கிறேன்; பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்**" இதிலும் உங்கள் ஜெபம் தேவை.

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை உங்களனைவரோடும் இருப்பதாக, ஆமென்".

இப்படிக்கு
உங்களன்புள்ள ஆத்மீகத் தந்தை
அ. ஞா. ஜெபராஜ், நெல்லைப் பேராயர்.

நற்போதகம் - அக்டோபர் 1971

நெல்லைப் பேராயர் அவர்கள் மூலமாக நெல்லைக் கிறிஸ்தவ மக்களுக்கு, முன்னாள் பேராயரான அ.ஞா. ஜெப்ராஜ் எழுதுவது :-

நான் அத்தியட்சாதீன அலுவலிலிருந்து ஓய்வு பெற்று ஒரு வருடமாகிறது. இதில நான் என்ன செய்தேன், தற்பொழுது நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்று அறிய பலர் விரும்புகின்றனர்,

நான் ஓய்வுபெற்றபின் சில மாதங்கள் சென்னையில் என் மகள் திருமதி ஜெயக்குமார் வீட்டிலிருந்தேன். அப்பொழுது சென்னைப் பேராயரவர்களின் உத்தரவின் பேரில் சில ஆலயங்களில் ஆராதனை நடத்தி பிரசங்கம் செய்தேன். பேராயர்களின் விருப்பத்துக்கிணங்க தென் இந்தியத் திருச்சபை சரித்திர வினா விடை சிறுவர்களுக்கு ஏற்றாற்போல் எழுதினேன். அது தமிழில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

சென்ற மே மாதத்தில் பாளையங்கோட்டையில் நடைபெற்ற பேராயர் அபிஷேக ஆராதனையில் கலந்து கொள்ளும் பாக்கியம் கிடைத்தது. ஆனால் எனது சுகயீனத்தினிமித்தமாக எல்லா வைபவங்களிலும் பங்கெடுத்துக்கொள்ள முடியவில்லை.

அங்கிருந்து வேலூருக்கு வந்து என் இளைய மகன் டாக்டர் மேஷாக் கிருபாகரன் வீட்டிலிருந்து கொண்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறேன். ஆண்டவர் கிருபையாக அளித்துவரும் சுகத்துக்கும் பெலனுக்கும் தகுந்தபடி வேளாவேளைகளில் இங்குள்ள சிற்றாலயத்தில் நடைபெறும் தமிழ் ஆராதனைகளில் பிரசங்கம் செய்து வருகிறேன். பிணியாளிகளில் சிலரை சந்தித்தும் வருகிறேன். கடவுளுக்கு ஸ்தோத்திரம்.

உங்கள் யாவரையும் பேராயர் அவர்களையும், அத்தியட்சாதீன ஊழியங்கள் எல்லாவற்றையும் ஆண்டவர் ஆசீர்வதிப்பாராக.

அ.ஞா. ஜெபராஜ்
முன்னாள் நெல்லைப் பேராயர்

பேராயர் ஜெபராஜைப் பற்றி பேராயர் தோமாஸ் காரட்......

பேராயர் ஜெபராஜ் அவர்கள் நாமெல்லாரும் அறிந்தபடி, நமது திருமண்டலத்துக்கென ஒரு திட்டம் வகுத்து அதன்படி செயல்பட்டார்கள். ஒரு தனி நபருக்கும், ஒரு குடும்பத்துக்கும், ஒரு சேகரத்துக்கும், ஒரு வட்டாரத்துக்கும் ஒவ்வொரு திட்டமென விசேஷித்த திட்டங்கள் அமைத்திருந்தார்கள். இவைகளில் ஒவ்வொரு புறமதத்தாருடைய வீட்டுக்கும் ஒரு சுவிசேஷப் பங்கு என்ற திட்டம் மிகவும் பிரபல்யமாகி, கல்கத்தாவிலிருந்து அவர்களுக்கு ஓர் அழைப்பு வந்து, அங்கே சென்று, அத்திட்டத்தை விளக்கியதுமின்றி, செயல்படுத்தியும் காட்டினார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக இவர்களுடைய பெயருக்கேற்றாற்போல் ஜெபமே ஜெயம் என்ற கொள்கையில் விடாப்பிடியாக தரித்திருந்து வெற்றியும் கண்டார்கள். எவ்வளவு பெரிய பிரச்சினையாக இருந்தாலும் அவர்கள் அதைக் கண்டு கலங்கியதே கிடையாது. இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் என்ற வேத வசனத்துக்கு முன் மாதிரியாகத் திகழ்ந்தார்கள்.

விசுவாசத்தைவிட்டு எக்காலமும் அவர்கள் நழுவியதில்லை. தூய ஆவியானவர் எப்போதும் வாசம் செய்யும் உண்மையான ஐயப்பாடில்லாத மனசாட்சி அவர்களுக்கிருந்தது. கடவுள் அழைத்த அழைப்புக்குத் தன்னை முற்றிலும் ஒப்புக்கொடுத்து, பொறுமையுடன் பந்தய ஓட்டத்தில் ஓடி மகிமையுள்ள வாடாத ஜீவ கிரீடத்தைப் பெற்றுக்கொண்டார்கள். குருமார், சபை ஊழியர் என்று மாத்திரமல்ல; சபையின் ஒவ்வொரு பிள்ளையின் மேலும் அவர்களுக்கு விசேஷித்த அக்கரை இருந்தது. யார் யாரெல்லாம் தங்களுக்காக ஜெபிக்கும்படியாகக் கேட்டுக்கொண்டார்களோ, அவர்களெல்லாருக்காகவும் தனித்தனியாகப் பெயர் சொல்லி ஜெபிப்பார்கள். விசேஷமாக தனது கடைசி காலத்தை, தன் பெலவீனத்தின் மத்தியில், வேலூரிலுள்ள கிறிஸ்தவ மருத்துவமனையிலுள்ள நோயாளிகளுக்காக ஜெபிப்பதில் செலவிட்டது நமது மனதை உருக்குகிறது என்பதில் சந்தேகமில்லை.

தொமாஸ் சா. காரட்,
நெல்லை பேராயர்

(நற்போதகம் - மே 1972)

ON BEING A BISHOP'S WIFE

Late Mrs. Jebakani Jebaraj.

(Transcription of a talk given at a YWCA meeting)

When I married a priest, I never for a moment imagined that I would one day be called upon to be a Bishop's wife. And so when I had to enter that role it was rather bewildering and embarrassing. Had we not been sure that it was a definite call from God and God alone, we would have hesitated to accept it. In this connection I may mention that a Diocese can elect its Bishop, but unfortunately it can not elect the Bishop's wife and so has to put up with the Bishop's wife, whoever she is whether they like her or not!

For twenty years I had played the part of a Presbyter's wife and so first of all let me share with you the difference I felt as soon as we were sent to Bishopstowe. At that time there was no one living in the compound and so I felt that we had been sent to a segregation (isolation) camp – completely cut off from all the Christians and from all the activities of the Christian Church. It looked like a punishment. As pastor we had been used to living right in the centre of the parish and we had a busy life taking part in all the church activities and visiting houses etc. Visiting houses along with my husband gave me great pleasure and satisfaction which I missed very much as Bishop's wife. The Bishop also felt the same and at one time even thought of taking up a part of the local parish as his own parish – but later on he found that he had no time for such work any more.

". . . . . a Diocese can elect its Bishop, but unfortunately it cannot elect the Bishop's wife and so has to put up with the Bishop's wife, whoever she is whether they like her or not!"

Soon after the Bishop's consecration the Bishop's wife was all of a sudden thrown into the limelight and so I began to receive invitations to open sales, distribute prizes, give devotional talks, preside at school functions, sports etc. I could not accept all the invitations because all my children were then

at home along with my aged father as well. This went on for 2 or 3 years after which people seem to have forgotten the existence of a Bishop's wife!!

As Bishop's wife I found that I had to learn many things. The first thing I had to learn was how to entertain foreign guests. A few days after we occupied the Bishopstowe, we had to entertain an English guest. The local missionaries were kind enough to offer their help and Miss Lindsay and Miss Peel came over to help me. They taught me how to prepare a room for a guest – how to make the bed, the things that should be kept in the bath room, where and how they should be kept etc. Miss Lindsay thought it wise that I should also know how to cook a simple English dinner. So she asked me to go to her place one evening. She taught me how to cook English food and she also taught me how to lay a table – i.e. where to place the spoons, forks and plates on a table. She also gave me the menu for 5 simple English dinners which was very helpful to me during the first few years.

A CSSM missionary Rev. Mullins stayed with us for nearly a week. I tried cooking English food for him myself. He was very friendly and used to give marks for my cooking. I scored nothing less than 50% and sometimes as high as 90%. On the whole our foreign guests were very friendly and tolerant. They don't insist on formalities and don't mind if our cups, saucers and plates do not match. We ask them to be 'honest' and not 'polite' when they come to the table. As Bishop's wife I have to play the role of a hostess and sit at the dinner along with the guests when I would have preferred to wait on them according to our Indian custom. A Bishop's wife has to do a lot of entertaining – mostly informal – and should be ready at any time.

"I deliberately kept the problems of the home and its burdens away from the Bishop, as I felt that he already had enough burden without that".

One other thing I had to learn was to learn or rather to re-learn how to speak English. After 20 years of village life, where not a single word of English would be understood, I had almost forgotten how to speak good English and so had to learn it all over again.

As the Bishop's life was a very busy one and he had to be away from home from 15 to 20 days a month, I found that the responsibility of running the home and caring for the children fell entirely on me. Though at first I found this rather difficult, later on I deliberately kept the problems of the home and its burdens away from the Bishop, as I felt that he already had enough burden

without that. And so, the responsibility of making important decisions on family matters and the discipline of the children, in which the father usually plays an important part, was entirely left to me. When I look back, I am thankful to God that He gave me the wisdom and strength to this duty according to His will.

Visitors who come to our house very often pass this remark, "You don't see much of your husband". "Quite true", I say – Yes, this has its own disadvantages. Sometimes when pressing problems arise and the Bishop is away, I feel so desperate that I say to myself, "I should get my daughter married to a person who will stay at home always!"! I do not know how far I am going to succeed!

